பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

07 11 2025 FRIDAY 7.15 PM

ஆகாஷவாணி - செய்திகள்

***தலைப்புச் செய்திகள்***

1. பீகார் சட்டப்பேரவைக்கு இரண்டாம் கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ள 122 தொகுதிகளில் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

2. மெட்ரோ ரயில் சேவையை வழங்குவதில் இந்தியா, உலக அளவில் மூன்றாவது இடத்தில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. கல்வி நிறுவனங்கள், மருத்துவமனை வளாகங்களில் நாய்கள் சுற்றித் திரிவதை தடுக்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

4. பாகிஸ்தானில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளன.

5. ஆஸ்திரேலிய சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Rathika Seelan அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>><<<<

பீகார் சட்டப்பேரவைக்கு இரண்டாம் கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ள 122 தொகுதிகளில் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி, எதிர்க்கட்சிகளின் கூட்டணி, ஜன் சுராஜ், ஆம் ஆத்மி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஔரங்காபாதில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

ஆக்கபூர்வமான அரசியலை எதிர்க்கட்சிகள் முன்னெடுப்பதில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

இளையோரை, காங்கிரஸ் மற்றும் ராஷ்ட்ரிய ஜனதா தள் தவறாக வழிநடத்த முயற்சி செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும், இந்த முயற்சிக்கு வெற்றி கிடைக்கவில்லை என்றும் பிரதமர் கூறினார்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, Chenari-ல் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு தவறிவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

மாற்று அரசியலுக்கு ஆதரவளிக்குமாறு கோரி, ஜன் சுராஜ் மற்றும் ஆம் ஆத்மி கட்சிகள் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவும் பல்வேறு பகுதிகளில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

பீகாரில் மழை வெள்ள பாதிப்புகளை தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

இந்த தேர்தலில், தங்கள் கூட்டணிக்கு மக்கள் ஆதரவு பெருகி வருவதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, பஹல்பூரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசுகையில், தொழிலதிபர்களுக்கு ஆதரவாக பிஜேபி செயல்படுவதாக குற்றம் சாட்டினார்.

>>>><<<<

பீகார் சட்டப்பேரவை தேர்தலில் வாக்காளர்களுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டிருப்பதற்கு, பெரும் வரவேற்பு கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நேற்று நடைபெற்ற முதல்கட்ட தேர்தலில் தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகளுக்கு வாக்காளர்கள் மகிழ்ச்சி தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு வாக்குச்சாவடிக்கு ஆயிரத்து 200 வாக்காளர்கள் என்ற நடைமுறை நெரிசலை தவிர்க்க உதவியதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டிருந்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது..

வேட்பாளர்களின் வண்ணப் புகைப்படங்கள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பொருத்தப்பட்டதன் மூலம், வாக்காளர்கள் எளிதில் அடையாளம் கண்டு வாக்களிக்க உதவியதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

மெட்ரோ ரயில் சேவையை வழங்குவதில் இந்தியா, உலக அளவில் மூன்றாவது இடத்தில் உள்ளதாக மத்திய அமைச்சர் திரு. மனோகர் லால் கூறியுள்ளார்.

Gurugram-ல் நடைபெற்று வரும், நகர்ப்புற போக்குவரத்து வசதி தொடர்பான உச்சிமாநாட்டில் இன்று கலந்து கொண்டு அவர் பேசினார்.

நாடுமுழுவதும் ஆயிரத்து 100 கிலோமீட்டர் தொலைவுக்கு மெட்ரோ ரயில் கட்டமைப்பு வசதி விரிவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விரைவில் இரண்டாவது இடத்தை இந்தியா பிடிக்கும் என்றும் அவர் கூறினார்.

நகர்ப்புற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களையும் அமைச்சர் பட்டியலிட்டார்.

>>>><<<<

அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள், மருத்துவமனை வளாகங்களில் நாய்கள் சுற்றித் திரிவதை தடுக்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கினை தாமாக முன்வந்து விசாரணை மேற்கொண்ட நீதிபதிகள் திரு. விக்ரம் நாத். திரு. சந்தீப் மேத்தா, திரு. Anjaria ஆகியோரைக் கொண்ட சிறப்பு அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

ரயில் நிலையங்கள் மற்றும் பேருந்து நிலைங்களில் நாய்கள் நுழைவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் விரைவுச் சாலைகளில் கால்நடைகள் சுற்றித் திரிவதை தடுக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

வந்தே மாதரம் தேசியப் பாடலின் 150வது ஆண்டு தின கொண்டாட்டங்களை ஒட்டி, நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், விடுதலைப் போராட்டத்தின் குரலாக வந்தே மாதரம் ஒலித்ததாக குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு உந்து சக்தியாக இப்பாடல் திகழ்வதாகவும் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் கூறினார்.

>>>><<<<

மஹாராஷ்ட்ராவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

இன்று அம்மாநிலத்தின் Beed பகுதியில் ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மழை பாதிப்பு குறித்து மஹாராஷ்ட்டிர அரசு ஆய்வு மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் உரிய நிவாரணத்தை மஹாராஷ்ட்ர அரசு வழங்கும் என்றும் அவர் கூறினார்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய உதவிகள் வழங்கப்படும் என்றும் திரு.சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>><<<<

கேரளாவில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகளில் அரசியல் கட்சிகளின் முகவர்கள் முழுமையாக பங்கேற்குமாறு அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி டாக்டர் Rathan Kelkar வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்தப் பணிகள் சுமுகமாக நடைபெற அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழகத்திலும், வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகள் குறித்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக், இன்று திருச்சியில் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

இப்பணிகளின் முன்னேற்றம் குறித்து அவர் இக்கூட்டத்தில் கேட்டறிந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

இந்தியா – சிலி இடையே வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

புதுதில்லியில் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த இந்தியாவிற்கான சிலி தூதர் திரு. Juan Angulo, இப்பேச்சுக்கள் நடப்பாண்டு இறுதிக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்தார்.

இதுவரை மூன்று சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றிருப்பதாகவும் திரு. Juan Angulo கூறினார்.

>>>><<<<

பாகிஸ்தானில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருகின்றன.

நடப்பாண்டின் முதல் ஆறு மாதங்களில், இதுதொடர்பாக இஸ்லாமாபாதில் மட்டும் 373 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இருப்பினும், இதில் ஒரு வழக்கில் கூட குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்கவில்லை என்று தன்னார்வ தொண்டு நிறுவனம் ஒன்றின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு நிர்வாகத்தின் தோல்வியையே இது எடுத்துரைப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Rathika Seelan அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 11-8, 11-7, 11-4 என்ற செட்கணக்கில் ஆஸ்திரேலியாவின் Karen-ஐ வென்றார்.

தெலங்கானா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tushar Suveer அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஹைதராபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 21-14, 21-16 என்ற செட்கணக்கில் இந்தியாவின் சதிஷ்குமாரை வென்றார்.

இதர ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டங்களில் மஞ்சுநாத், Alap Mishra, Ginpaul Sonna ஆகியோர் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் Sakshi Phogat, Mansi Singh, Rakshitha Sree, Shreya Lele ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் Maneesha – Dhruv Rawat இணையும், Ritika Thaker – Nitin Kumar இணையும், சாத்விக் ரெட்டி – Reshika இணையும் அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

ஆடவர் இரட்டையர் பிரிவில் அர்ஜுன் – Amsakarunan இணையும், மகளிர் இரட்டையர் பிரிவில், சானியா சிக்கந்தர் – Rashmi Ganesh இணையும் அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

இந்திய ஹாக்கியின் நூற்றாண்டு கொண்டாட்டங்களை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

**>>>><<<<**

இந்தியா-ஏ அணிக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா-ஏ அணி முதல் இன்னிங்ஸில் 221 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

பெங்களூருவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்ட நேர இறுதியில் இந்தியா இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 78 ரன் எடுத்துள்ளது.

**>>>><<<<**

போர்ச்சுக்கலில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Vasanti Shinde - Latvia-வின் Elza Tomase இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-1, 6-0 என்ற செட்கணக்கில், போர்ச்சுக்கலின் Barbara Brito – Maria Beatriz Teixeira-இணையை வென்றது.

**>>>><<<<**